IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ULUNDURPET

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII , Code of Criminal Procedure)

CC . 10/2021 Date : 27.04.2026 D.W.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மகேஷ்வரி | தொழில் | வீட்டுகுடித்தனம் |
| கணவர் பெயர்; | சிவசரவணன் | வட்டம் | |
| கிராமம் | உளுந்தூர்பேட்டை | வயது | 41 |
| புகார்தாரர் மற்றும் எதிரி ஆஜர் . வழக்கறிஞர்கள் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**எதிரி தரப்பு முதல் விசாரணை –**

1. எனக்கு இந்நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கபெற்ற சம்மனின் பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். புகார்தாரரர் சிவராஜ் எனது மாமனார். என் மாமனார் சிவராஜ் நடத்திவந்த ஒரு மெடிக்கல் ஷாப்பை நான் அவ்வபோது பார்த்துக்கொள்வேன். நான் MSC. B.Ed படித்துள்ளேன். எனது மாமனாருக்கு 4 மருமகள்கள். அதில் ஒரு மருமகள் வள்ளிசங்கீதா 20 வருடங்களாக வெளிநாட்டில் உள்ளார். வள்ளிசங்கீதா இந்தியாவிற்கு வந்து 10 வருடத்திற்கு மேல் இருக்கும். மற்றொரு மருமகள் சசிகலாவிடம் என் மாமனார் பேசுவதில்லை. ம.சா.ஆ. 1 காசோலையில் நான் எனது மாமனார் பெயர் மற்றும் தேதியை மட்டும் பூர்த்தி செய்தேன். 07.02.2020 ந் தேதி ரூ. 3 லட்சத்தை என் மாமனார் ரமேஷ் என்பவருக்கு கொடுத்தார். எவ்வளவு வட்டிக்கு கொடுத்தார் என்று தெரியாது. எதிரிக்கு பணம் கொடுக்கும் போது நானும், எனது மாமனாரும் இருந்தோம். 07.02.2020 ந் தேதி கொரனோ காலகட்டத்தில் ஊரடங்கு இல்லை. என் மாமனார் மெடிக்கல்லில் வைத்து எதிரிக்கு பணம் கொடுத்தார். எனது மாமனாருக்கு எழுத படிக்க தெரியும். என் மாமனார் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர். இவ்வழக்கு காசோலை ரூ.3 லட்சத்தை தவிர மற்றொரு முறை ரூ.3 லட்சத்தை என் மாமனார் மருந்து கடையில் வைத்து எதிரிக்கு கொடுத்துள்ளார். என் மாமனார் தான் பண வரவு செலவுகளை பார்த்து கொள்வார். ம.சா.ஆ–1 காசோலையில் உள்ள " Three lakhs only " என்பதை நான் பூர்த்தி செய்யவில்லை. ம.சா.ஆ–1 காசோலையில் உள்ள" Rs.3,00,000" என்பதையும் நான் பூர்த்திசெய்யவில்லை. ம.சா.ஆ–1 காசோலையில் சிவராஜ் என்ற பெயரை என் மாமனார் சொல்லி அதில் பூர்த்தி செய்தேன். ம.சா.ஆ–1 காசோலையை என் மாமனார் தான் வங்கிக்கு சென்று வசூலுக்கு செலுத்தினார். 27.02.2020 ந் தேதியின் போதும் கொரோனா ஊரடங்கு என்பது எனக்கு சரியாக நியாபகம் இல்லை. புகார்தாரரின் மற்றொரு மகன் சிவகுரு புகார்தாரர் வீட்டிற்கு வருகிறார்.

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1. இவ்வழக்கு காசோலையில் தொகையை எழுத்து, எண்ணால் எழுதியது யார் என்றால் எதிரி ரமேஷ் என்று சொன்னால் சரிதான். புகார்தாரரின் வீட்டின் ஒரு பகுதியில் மருந்து கடை வைத்துள்ளோம் என்றால் சரிதான். காசோலை தொகையை பெற்றுக்கொண்டு காசோலையில் ஒரு வாரம் கழித்து எதிரி ரமேஷ் சொல்லி தான், நான் தேதியை பூர்த்தி செய்தேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**

1. மேற்படி வழக்கு காசோலையில் 27.02.2020 ந் தேதி என்பதை நான் 27.02.2020 ந் தேதி அன்று தான் பூர்த்தி செய்தேன் என்றால் சரிதான். மேற்படி தேதியை பூர்த்தி செய்யுமாறு கூறியது யார் என்றால் என் மாமனார் சிவராஜ். என் மாமனார் சிவராஜ் என்ற பெயர் மற்றும் தேதியை வழக்கு காசோலையில் நான் பூர்த்தி செய்ய வேண்டிய அவசியம் என்ன என்றால் என் மாமனாருக்கு வயதாகி கை நடுக்கம் இருப்பதால் என்னை பூர்த்தி செய்ய சொன்னார்.

Typed by E.Veeramani

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

V GOMATHI

Digitally signed by V GOMATHI
Date: 2026.04.27 15:56:11 +0530

Judicial Magistrate No.I,
Ulundurpet.